Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No. 34/2023**

**2023-ம் ஆண்டு நவம்பர் மாதம் 22-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 4 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | எஸ்டேட் வேலை |
| பெயர் | - | வசந்தா | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | சுப்பிரமணி | சமயம் | - | இந்து |
| கிராமம் | - | பன்னிமேடு | வயது | - | 47 |
| சாதி | - | - | | | |

**22-11-2023**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

**1.** நான் பன்னிமேட்டில் வசித்து எஸ்டேட் வேலை பார்த்துவருகிறேன். கடந்த 24.05.2023-அன்று நான் வேலைக்கு போயிருந்தேன். அப்போது பேக்ட்ரியிலிருந்தவர்கள் என் வீட்டுக்காரரை கத்தியால் குத்தி ரத்தம் போய்கொண்டிருக்கிறது சீக்கிரம் போமா என்று சொன்னார்கள்.

2. நான் வேகமாக ஓடிப்போய்ப் பார்த்தேன். எஸ்டேட் ஆஸ்பத்திரிக்கு என் கணவர் சுப்பிரமணியை தூக்கி வந்தார்கள். அங்கு போய்பார்த்தபோது என் கணவருக்கு வலதுகை புஜத்தில் குத்தி ரத்தம் வந்தது. அங்கு சும்மா கட்டுமட்டும் போட்டார்கள். அதன் பிறகு ஆம்புலன்ஸை வரவழைத்து பன்னிமேடு ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தார்கள்.

3. அந்த ஆம்புலன்ஸில் மருமகளும், மகனும் போனார்கள். நான் மறுநாள் வால்பாறை அரசு மருத்துவமனையில் வந்து பார்த்தேன். அதன் பிறகு ஆஸ்பத்திரியில் தையல் போட்டுள்ளதாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் போதுமான வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.